# நைட்ரிக் ஆசிட் வீச்சில் பாதிக்கப்பட்டவருக்கு சிறப்பு சிகிச்சை




■ நைட்ரிக் ஆசிட் வீச்சில் பாதிக்கப்பட்டவருக்கு, மணப்பாக்கம் மியாட் மருத்துவமனையில் சிறப்பு சிகிச்சை அளிக்கப்பட்டது.

மணப்பாக்கம், ஜூலை 7–

நைட்ரிக் ஆசிட் வீச்சில் பாதிக்கப்பட்டவருக்கு, சிறப்பு சிகிச்சை அளித்து, மணப்பாக்கம் மியாட் மருத்துவமனை சாதனை படைத்துள்ளது.

தான்சானியா நாட்டின், சன்ஜிபார் பகுதியை சேர்ந்தவர் முகமது உமர் சையத், 59. இவர் மீது, மே மாதம், 22ம் தேதி, ஒரு கும்பல், ஒரு பக்கெட், நைட்ரிக் ஆசிட்டை ஊற்றியது. இதில், முகமது உமர் சையத்தின் உடல் நிலை பாதிக்கப்பட்டு, தோல் உதிர்ந்தது. மேலும், தொற்று நோய் பாதிப்பும் ஏற்பட்டது.

இதை அடுத்து, அவருக்கு அங்குள்ள ஒரு மருத்துவமனையில், மூன்று வாரங்கள் சிகிச்சை அளிக்கப்பட்டது. இதில் குணமடையாததால், அவருக்கு, சென்னை மணப்பாக்கத்தில் உள்ள மியாட் மருத்துவமனையில் சிகிச்சை அளிக்க, அந்நாட்டு அரசு திட்டமிட்டது.

ஜூன், 22ம் தேதி, ஒரு மருத்துவருடன், முகமது உமர் சையத்தை, மியாட் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இங்கு, சிறப்பு மருத்துவர், ஸ்ரீபன்கோஷி தலைமையில், மருத்துவர்கள், முகமது உமர் சையத்துக்கு சிறப்பு சிகிச்சை அளித்தனர். தொடையில் இருந்து தோலை எடுத்து, முகம், கழுத்து, தலை, மார்பு பகுதிகளில் பொருத்தினர்.

இந்த சிகிச்சைக்கு பின், முகமது உமர் சையத், பழைய நிலைக்கு திரும்பியுள்ளார். இதை அடுத்து, அவர், இன்று, தன்னுடைய சொந்த நாட்டுக்கு புறப்பட்டு செல்கிறார்.